காலத்திற்கு ஏற்ற
இறக்குமதிசெய்யப்பட்ட
பல பொருட்கள்
தாராளமாகக் கிடைக்கும்
- மணிக்கூடுகள்
- கசெட் றேடியோக்கள்
- 3 விசை மிக்சர்
- காப்பி கிறைண்டர்
- எலெக்ரோனிக் கருவிகள்

சி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன்: 284

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 20 ஐப்பசி 18 ஜுல்ஹஜ்: 2 இதழ்: 264
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 4-11-78

SRI LANKA - JAFFNA
RECEIVED
1978
PERIODICALS DIVISION
LIBRARY

ரெபிரிஜிரேட்டர்கள்
குளிர்சாதனப் பெட்டிகள்,
மின் விசிறிகள்.
சர்வதேச தரத்திலானது
உங்கள் இல்லங்களுக்கு
அவசியம் தேவை.
சிறிதளவே கையிருப்பில் உண்டு.

இ.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் போன் 284.

### இரண்டு தினங்களாக தொடர்ந்துபேய்மழை

# யாழ். குடாநாட்டில் வெள்ளம்!

# குடும்பங்கள் இடம்பெயர்வு!!

## போககுவரத்தும் பாதிப்பு!

### புயல் வீசலாம் என்று எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண குடாநாட்டில் கடந்த இரு தினங்களாக தொடர்ந்து பெய்யும் பெருமழையினால் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. 1958ம் 1968-ம் ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளம் இம்முறை ஏற்படும் என்று மக்கள் அச்சமடைந்து பாதுகாப்பான பகுதிகளுக்கு குடிபெயர்ந்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் இரவும், நேற்றும் பகலும் தொடர்ச்சியாகப் பெய்த பெருமழையினால் யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து பாடசாலைகளிலும் மற்றும் மேட்டு நிலங்களிலுள்ள வீடுகளிலும் தஞ்சம் புகுந்துள்ளனர். குடாநாட்டிலுள்ள சகல குளங்களும் நிரம்பி வழிகின்றன. இதனால் இக்குளங்களுக்கு அண்மையில் உள்ள வீடுகளே பெருமளவில் நீரில் மூழ்கியுள்ளன.

**பஸ்சேவை பாதிப்பு**

வெள்ளத்தினால் பல பகுதிகளில் பஸ் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது, சில பஸ் சேவை ரத்து செய்யப்பட்டுள்ளன. தேங்கிய வெள்ளத்தை திருப்புவதற்காக வீதிகள்டு பல இடங்களில் வெட்டப்பட்டுள்ளதால் வாகனப் போக்குவரத்து முற்றாக பாதிக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் பஸ் நிலையம் 3 அடி வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மழை பெய்துகொண்டிப்பதால் வெள்ளம் சகல பகுதிகளிலும் அதிகரித்து வரு

(6-ம் பக்கம் பார்க்க)

வெள்ள அகதிகள்

### பாடசாலைகளில் தங்குவதற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களைப் பாடசாலைகளில் தங்க அனுமதிக்குமாறு வடமாநில கல்வியதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் சகல பாடசாலை அதிபர்களையும் கேட்டுள்ளார்.

பெய்து கொண்டிருக்கும் பெருமழை காரணமாக வீடு வாசல்களை இழந்தவர்களுக்கு

[6ம் பக்கம் பார்க்க]

## பீலிக்ஸின்மைத்துனருக்கும் நிஹால் ஜயவிக்கிரமவுக்கும்

# ஜனாதிபதி கமிஷன்

### முன் ஆஜராக உத்தரவு

[கொழும்பு]

முன்னாள் நீதி அமைச்சின் செயலாளர் திரு நிகால் ஜயவிக்கிரம, முன்னாள் நிதி,நீதி அமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டார நாயக்காவின் மைத்துனர் திரு காமினி விக்கிரம நாயக்கா ஆகிய இருவரையும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது,

திரு ஜயவிக்கிரமவை டிசம் மாதம் 4-ம் திகதி ஆணைக்குழுவிடம் வாக்குமூலம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், ஜனவரி 2-ம் திகதி ஆணைக்

[6ம் பக்கம் பார்க்க]

## யாழ்ப்பாணத்திலிருந்தே கொழும்புக்கு ரயில்

[யாழ்ப்பாணம்]

கொழும்பு-காங்கேசன்துறை ரயில்சேவை கோண்டாவிலில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை

(6-ப் பக்கம் பார்க்க)

# யாழ். வளாகத்தில் 100 பேர் தஞ்சம்

[கோண்டாவில்]

யாழ். வளாகத்தைச் சூழவுள்ள இடங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 100 பேர் வளாகத்தில் தஞ்சமடைந்துள்ளன்ர்,

இந்து மாணவர் மன்றம் இவர்களுக்கான உணவு வசதிகளைச் செய்து வருகிறது,

வளாகத்தினுள்ளும் வெள்ளம் புகுந்துள்ளது,விஞ்ஞான பீடவிரிவுரை மண்டபத்தினுள்ளும் வெள்ளம் புகுந்துள்

] ம் பக்கம்பார்க்க]

### அமைச்சர் நேரில் பார்த்தார்

[யாழ்ப்பாணம்]

சமூகசேவைகள் அமைச்சர் திரு அசோகா கருணரத்தின யாழ்ப்பாணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் பார்வையிட்டார்,

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய உதவிகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் சமூக சேவைத் திணைக்கள அதிகாரிகளைப் பணித்தார்.

பலத்த மழை காரணமாக அமைச்சரின் அனுராதபுர விஜயம் ரத்துச் செய்யப்பட்டது. [இ]

### புயல் அபாயம்

[யாழ்ப்பாணம்]

நேற்று மாலை 6மணியிலிருந்து 24 மணி நேரத்திற்குள் யாழ். குடாநாட்டிலும் மற்றும் முல்லைத்தீவு, மன்னார்ஆகியபகுதிகளிலும் 60கிலோமீட்டர்வேகத்தில்புயல்வீசலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது

வங்காளவிரிகுடாவில் தோன்றியுள்ள காற்று அமுக்கம் இப்போது வடக்கு, வடமேற்காக நகர்ந்து கொண்டிருப்பதால் தமிழ்நாட்டின் தெற்குக் கரையோரங்களில் புயல்வீசலாம் என இந்திய அவதான நிலையம் தெரிவித்துள்ளது. [இ]

### திருமண அழைப்பு

**ஸ்ரீஇராமரத்தினம் - ரஞ்சினி**

பத்மநிதி உரும்பிராயில் வாழும் இளைப்பாறிய சுகாதார அத்தியட்சகர் திரு கலாநிதி க. சிவஞானரத்தினம் தம்பதிகளின் புத்திரன் செல்வன் ஸ்ரீஇராமரத்தினத்திற்கும் வண்ணார்பண்ணை இலக்கம் 74/1, அரசடி வீதியில் வாழும் திரு. செ. இராமச்சந்திரன் தம்பதிகளின் புத்திரி செல்வி ரஞ்சினிக்கும் 5-11-78 ஞாயிற்றுக்கிழமை காலை 11மணியளவில் வரும் சுபமுகூர்த்தத்தில் நல்லூர் சிவன் கோவிலில் (சைவ முறைப்படி) திருமணம் நிகழ்த்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் அடுத்தநாள் 6-11-78ந் திகதி மாலை 4 மணிக்கும் 8 மணிக்குமிடையில் உரும்பிராய் மணமகன் இல்லத்தில் நடைபெறும் தேநீர் விருந்துபசாரத்திலும் யாவரையும் கலந்துகொண்டு மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

தனித்தனி அழைப்புக்கள் அனுப்ப முடியாததையிட்டு வருத்தம் தெரிவிக்கிறோம். 0601

### பண்டிதமணியின் இரங்கல்

புலவ(ர்)மணி போய்விட்டார் போய்விட்டார் என்றென்
றலறியதால் ஆகாசவாணி - சிலநொடிகள்
ஏங்கி யிருந்து பழ எண்ணந் திரையெறிந்து
தூங்கல் துறந்ததென் கண்.

...பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

## கிழக்கிலங்கையின் ஒளிவிளக்கு மறைந்தது

### இன்று இறுதிக் கிரியைகள்

(மட்டக்களப்பு)

முதுபெரும் தமிழறிஞர் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளையின் இறுதிக் கிரியைகள் இன்று சனிக்கிழமை நடைபெறும்.

புலவர்மணியின் மறைவால் மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் ஒரே சோகமயமாகக் காட்சிதருகிறது வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருக்

(6-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

கோழித்தீன் வியாபாரத்தில் அனுபவமுள்ள விற்பனையாளர்கள் தேவை. அத்தாட்சிப் பத்திரத்துடன் நேரில் வரவும். N. தர்மராஜா, 25, மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம்.
0724

### விற்பனைக்கு

சுண்டிக்குளியில் கட்டிடக் காணித்துண்டு, சுண்டிக்குளி மகளிர் பாடசாலைக்கு பல பக்கமாக பிளெச்சர் ரோட் முடிவில் 2 பரப்பு 3.7 குளி விஸ்தீரணமுள்ளது. வாங்க விரும்பும் விலையை தெரிவிக்கவும். V. துரைராஜா, 9/4, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.
0723

JVC ரியூனர் / அம்பிளிபயர் 50 வற்ஸ் சோனி ஸ்பீக்கர்கள் (பெட்டி) பயனியர் கஸெட் டெக் (DOLBY SYSTEM) புத்தகம் புதியவை விபரங்களுக்கு: 86, முதலாம் குறுக்குத் தெரு, (மெயின் வீதிக்கு அருகாமை) யாழ்ப்பாணம்.
0714

## பருத்தித்துறையில் இன்று ஐ.நா. தினவிழா

[புலோலி]

யாழ். மாவட்ட ஐக்கிய நாடுகள்தின விழா இன்று யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ தலைமையில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையில் நடைபெறவிருக்கிறது.

அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ தேசியக் கொடியையும், ஐக்கியநாடுகள் கொடியை ஐ.நா.சபைப்பிரதிநிதியும் ஏற்ற வடஇந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் தேசியகீதத்துடன், மெதடிஸ்ட பெண்கள் உயர்தரக்கல்லூரி பெற்றார்-ஆசிரியர் சங்கக் காரியதரிசியும் உதவி அரசாங்க அதிபருமான திரு. மு. தம்பிமுத்து மங்களவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார்கள்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

இல. 6/15, கன்னுதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பழனிமுத்து இராசகோபால் என்பவரின் மரணசாதன விடயத்தில்.

மரணமெய்தியவா

தத்துவ வழக்கு இல: 3400

பழனிமுத்து இராசகோபால் கைம்பெண் சின்னம்மா, இல. 6/15, கன்னுதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்குமேலேபெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனு 1978ம் ஆண்டு கார்த்திகை மாதம்10ம் திகதி நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னா தோன்றி அவ்வாறு பதிட்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1978-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 20-ந் திகதி.

இந்நீதிமன்றத்தின் உத்தரவுப்படி
ஒப்பம்

பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்

சி. இராசேந்திரன்,
சட்டத்தரணி,
மானிப்பாய். 0707

இதனையடுத்து அரசாங்க அதிபர் ஐ. நா. சபைப்பிரதிநிதி, பருத்தித்துறை எம். பி. திரு. திரு. க. துரைரத்தினம் வடமாநில கல்வி அதிபதி திரு. ரி.மாணிக்கவாசகர் ஆகியோர் உரையாற்றுவர். (உ)

## யாழ். குடாநாட்டுக் குடிநீர் பிரச்னை:

# பிரதமருடன் தொடர்பு கொள்ளுமாறு சமூக சேவை அமைச்சர் ஆலோசனை!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தண்ணீர்ப் பிரச்னைபற்றி பிரதமருடன் தொடர்பு கொள்ளவேண்டும் என்றுசமூக சேவைகள் அமைச்சா திரு. அசோக கருணரத்தின, யாழ். அரசாங்க செயலகத்தில்நடந்த மாநாட்டில் தெரிவித்தார்

இம் மாநாட்டிற்கு தலைமை வகித்த அமைச்சா திரு அசோக கருணரத்தின முதலில் தமது தாய்மொழியான சிங்களத்திலும் பின் ஆங்கிலத்திலும் உரையாற்றினர். அமைச்சரைத் தொடர்ந்து பேசிய சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினம், நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் ஆகியோர் அமைச்சரைப் பின்பற்றி முதலில் தாய்மொழியான தமிழிலும் பின் ஆங்கிலத்திலும் உரைநிகழ்த்தினர்கள்.

யாழ் குடாநாட்டில் தண்ணீர் பிரச்னை முக்கியபிரச்னையாக இருப்பதாகவும், மக்கள் குடிநீருக்குப்பெரும் கஷ்டப்படுவதாகவும் நல்லூர் எம்.பி. திரு. எம். சிவசிதம்பரம் பேசியபோது அது தொடாபாக பிரதமரைச் சந்திக்குமாறு அமைச்சர் தெரிவித்தார்.

அரசாங்க அதிபர் திரு. லயனல பெர்ணண்டோ பேசுகையில், ஊர்காவற்றுறை எம். பி பண்டிதர் க பொ இரத்தினத்தின் வேண்டுகோளைத் தொடர்ந்து தீவுப்பகுதி, குறிப்பாக புங்குடுதீவு, நாரந்தனை, மண்டைதீவு, நெடுந்தீவு ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வழங்குவதற்கான திட்டத்தை ஆரம்பிக்க மதிப்பீடுசெய்யப்பட்டு வருவதாகக் கூறினர் இத்திட்டத்தின் வேலை ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாகவும் அவர் கூறினர்.

நல்லூர் எம் பி திரு எம் சிவசிதம்பரம் பேசுகையில்கூறியதாவது:- 'பழைய நண்பரான அமைச்சரி, மக்களின் கஷ்டங்களை உணர்ந்தவர் இங்கு அவரை வரவேற்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன் யாழ்ப்பாணக்குடாநாட்டிலுள்ள காசநோயாளர் சிகிச்சைக்காக, சொந்தச் செலவில் காங்கேசன்துறைஆஸ்பத்திரிக்குச் செல்லவேண்டியிருக்கிறது அவர்களுக்கு வாகனவசதி செய்துகொடுக்கவேண்டும்'

அமைச்சின் செயலாளர் திரு சிறிசேன, நோயாளிகளின் வசதிக்காக நடமாடும் எக்ஸ்ரேகருவிவாகனம்ஒன்றை ஒழுங்குசெய்யலாம் எனக் கூறினர்

(6-ம் பக்கம் பார்க்க)

# "இலங்கையை இரண்டாக பிரிக்கமுடியாது"

-- அமைச்சர் அசோகா கருணரத்ன

(யாழ்ப்பாணம்)

"இலங்கை ஒரு சிறிய நாடு. இந்த நாட்டை இரண்டாகப் பிரித்து தனி இராச்சியம் அமைத்து ஆள முடியாது இந்நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு நாம் வெளிநாடுகளின் உதவியையே நம்புகின்றோம். எனவே ஒவ்வொரு இளைஞரும், யுவதியும் அரசியல் குரோதங்களை மறந்து தமது எதிர்கால சந்ததியினரின் நல்வாழ்விற்காக அபிவிருத்தியில் ஈடுபடவேண்டும்"

இவ்வாறு சமூக சேவைகள் அமைச்சர் திரு. அசோகா கருணரத்தின தமக்கு அளிக்கப்பட்ட இராப்போசன விருந்து வைபவத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினர்.

இராப்போசன விருந்தை வல்வெட்டித்துறை ஐ தே க பிரமுகரும், தொழிலதிபருமான திரு ஏ கணேசலிங்கம் தமது இல்லத்தில் வழங்கி கௌரவித்தார் வைபவத்தில் பிரதியமைச்சர் திரு ஜே எல் சிறிசேன தம்பதிகள், சமூக சேவை அமைச்சின் செயலாளர் திரு ஏ ஸி குணசேகர தம்பதிகள், யாழ்மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் திரு எகொடபிட்டியா, இராணுவ அதிகாரிகள் ஆகியோரும கலந்து கொண்டனர்.

அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: "நான் இன்று தெற்கிலிருந்து வந்திருக்கிறேன் என்னை அன்பாக வரவேற்று உபசரிக்கின்றீர்கள் நீங்களும் வடக்கிலிருந்து தெற்குக்கு வந்து சகோதரர்களைபோல அங்கு வாழவேண்டும் பிரிவினை பேசினல், சமூகங்களிடையே ஒற்றுமை வளராது, பகைமையே உருவாகும்

"இந்த வைபவத்தில் இளம் யுவதிகளையும், இளைஞர்களையும் காணுகின்றபோது பெருமகிழ்ச்சியடைகின்றேன் இளைய சமுதாயம் சமுதாயப் புரட்சியில இறங்குமானல் நிச்சயமாக ஜனநாயக சோஷலிச சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும்

"அரசைப் பொறுத்தவரையில் தமிழரீ, சிங்களவர், முஸ்லிம் என்ற பாகுபாடு கிடையாது. ஒவ்வொரு இலங்கையரினதும் குறைகளை அரசு தீர்த்துவைக்கும்" எலறு கூறினர்.

திரு. ஏ. கணேசலிங்கம் உரையாற்றுகையில் "முன்னைய அரசு, ஐக்கிய தேசியக் கட்சியினர் இநநாட்டில் இருக்கக்கூடாதென பலவகையிலும் நடவடிக்கை எடுத்து வந்தது இன்றைய அரசுக்கு அரசியல் குரோதம் கிடையாது நேர்மையான வழியில் கூட்டணியினராலும் அவர்களது குறைகளை நிவர்த்திசெய்கிறது எம்மைப் பொறுத்தவரையில் ஐக்கியதேசியக் கட்சி ஒன்றுதான் ஜனநாயகரீதியில் தமிழர் குறைகளைத் தீர்க்கக்கூடியது அதற்கு நாம் ஆதரவு வழங்கவேண்டுல்" என்றார்

விழாவில் பலர் உரையாற்றினர் [செ[

அளவெட்டி சற்குணசிங்கம்

## சாவகச்சேரி நீதிமன்றத்திலும் ஆஜர் செய்யப்படுவார்

(மாவட்டபுரம்)

அளவெட்டியைச் சேர்ந்த சந்தேகநபரான சரவணமுத்து சற்குணசிங்கத்திற்கு சாவகச்சேரி நீதிமன்ற துப்பாக்கிக் கொள்ளையிலும் சம்பந்தம் இருக்கலாமெனக் கருதப்படுவதால் சாவகச்சேரி நீதிமன்றத்திலும் இவர் ஆஜர்செய்யப்படவுள்ளார்.

சங்கானைப் பொலிசாரால் அண்மையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கைது செய்யப்பட்ட மேற்படி சந்தேக நபர் கடந்த வியாழக்கிழமை மல்லாகம் நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்புக்குட்படுத்தப்பட்டபோது சங்கானைப் பொலிசாரீ மேற்கண்டவிடயம் பற்றித் தெரிவித்தனர்.

சாவகச்சேரி நீதிமன்ற துப்பாக்கிக்கொள்ளையில் இவர் சம்பந்தப்பட்டிருக்கலாமெனக் கருதப்படுவதால் இவரை சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர்செய்யஅனுமதிதருமாறு கோரியுள்ளதாக சங்கானைப் பொலிசார் தெரிவித்ததையடுத்து மல்லாகம் நீதிபதி அதற்கான அனுமதியை வழங்கினர்.

இந்நபர்விரைவில் சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளார். (உ)

## கேள்வி விளம்பரம்

### கிளிநொச்சிப் பட்டணம்

பரந்தன் சந்தையில் ஒரு மாட்டிறைச்சிக் கடை அமைத்து 01-01-1979 தொடக்கம் 31-12-1979வரை கட்டுப்பாட்டு விலைக்கு இறைச்சி விற்பனை செய்வதற்கான கேள்விகள் என்னல் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் முறையே ரூபா 100/- கேள்விப் பிணைப்பணமாகவும், ரூபா 10/- கேள்விப் பத்திரப் பணமாகவும் செலுத்துவதன் பேரில் 10-11-1978-ந் திகதி காலை 10-00 மணிவரை வழங்கப்படும்.

கேள்விகள் அரக்கு முத்திரையிடப்பட்டு விசேடஆணையாளர், பட்டணசபை அலுவலகம், கிளிநொச்சி என விலாசமிடப்பட்டு 13-11-1978ந் திகதி காலை 10-00 மணிக்குப் பிந்தாது கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் எக்காரணம் கொண்டும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது முன்னர் கேள்விகள் அனுப்பியவர்களும் மீண்டும் கேள்விகள் அனுப்ப வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

விசேட ஆணையாளர்,
கிளிநொச்சிப் பட்டணம்.

விசேட ஆணையாளரீ
அலுவலகம்,
கிளிநொச்சிப் பட்டணம்,
கிளிநொச்சி.
1978-11-02 0728

## இடமாற்றம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பெற்ரோலிய கூட்டுத்தாபன டிப்போ முகாமையாளராகக் கடமையாற்றிய திரு. இரவீந்திரன் யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதையடுத்துக் கிளிநொச்சிக்கு மட்டக்களப்பில் டிப்போ முகாமையாளராகக் கடமையாற்றிய திரு. சந்திரசேகரம் அவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (அ)

## பிரயாணிகள் கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

காரைநகரிலிருந்து அச்சுவேலிக்கு புதிய பஸ்சேவை ஒன்றை ஆரம்பிக்குமாறு காரைநகர் இ. போ. ச. டிப்போ அத்தியட்சகரை காரைநகர் பொதுமக்கள் வட்டுக்கோட்டை தொகுதி எம். பி. திரு. திருநாவுக்கரசு ஊடாகக்கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

காரைநகரிலிருந்து தினமும் அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை புலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை ஆகியவற்றிக்கு அநேகமானோர் பிரயாணம் செய்வதினல் அவர்களின் வசதியை முன்னிட்டு இப்புதிய பஸ் சேவையை நடாத்தி உதவுமாறும் இவ் வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ[

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

### சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில்

விரகத்திப்பிள்ளை கதிரேசு,
கெற்பேலி - மிருசுவில். - வாதி

இல. 4925 / சுடு. எதிராக

கதிரன் சின்னத்தம்பி,
கச்சாய் - கொடிகாமம். - பிரதிவாதி

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தால் மேற்படி 4925-ம் இலக்க வழக்கில் எனக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தின் படி பின்னல் ஆதன இடாப்பில் விவரிக்கப்படும் ஆதனம் 1978-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 20-ந் திகதி 20-11-78 திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அக்காணிக்குள் நின்று என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வையான தொகை ரூபா 1540/-தும் மேலும் ரூபா 700-க்கு 12-5-76 தொடக்கம் 21-10-77வரைக்கும் நூற்றுக்கு 12 வீதவட்டியும் பின் கூடிவரும் முழுத்தொகைக்கும் 21-10-77 தொடக்கம் முழுவதும் இறுத்துத் தீர்க்கும்வரை நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச்செலவு ரூபா 550-85 சதமும்.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி, கச்சாய் கோவிற்பற்று, கச்சாய் இறை ஆழியான் தோட்டமும் மறுபிரிவும். தேணியாமூலையும் நி. ப. 50 (ஐம்பது) எல்லைகிழக்கு பொன்னையா சின்னத்தம்பிக்கும் பங்காளருக்கும் வீரசிங்கம் பாலசிங்கத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்கள். வடக்கு வீரசிங்கம் பாலசிங்கத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு ரோட்டு. தெற்கு சின்னத்தம்பி பெண் சின்னத்தங்கத்திற்கும் பங்காளருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள் இதடங்கிலும் இதைச் சேர்ந்த வைகளனைத்திலும் சொரியலாக பத்திலொரு பங்கும்.

எஸ். வி. சதாசிவம்,
நீதிமன்ற விற்பனவு ஆணையாளரி,

சாவகச்சேரி,
1978-10-10. 0725

ஈழநாடு The Eelanaadu

## வீதியில் ஒழுங்கு

ஒற்றைவழிப் பாதை வழியாக சைக்கிளில் பிரயாணம் செய்த 27 பேருக்கு யாழ்ப்பாண நீதவான் திரு. டபிள்யு.எம். வீரத்ன தலா 35 ரூபா அபராதம் விதித்திருக்கிறார்

வாகனப் போக்குவரத்துச் சட்டத்தை மீறிய குற்றத்துக்காக தண்டிக்கப்பட்ட இந்த 27 பேரில் பெரும்பாலானவர்கள் இளைஞர்கள்.

ஒற்றைவழிப்பாதைகளில் வாகனங்களைச் செலுத்த வேண்டாமென்றும், பக்கம் பக்கமாக சைக்கிளில்செல்ல வேண்டாமென்றும், யாழ்ப்பாணம் பொலிசார் பல தடவைகளிலும் எச்சரித்து வந்திருக்கிறார்கள். சட்டத்தை மீறுகிறவர்கள்மீது நடவடிக்கைகளும் எடுத்து வந்திருக்கிறார்கள். ஆனால் வீதிகளில் போக்குவரத்து விதிகளை மீறிப் பிரயாணம்செய்து குற்றம் புரிவது குறையக்காணோம்.

இப்பொழுது பொலிசார் இதுவிஷயமாக சற்றுக் கடுமையாகவே செயல்பட ஆரம்பித்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. இதன் காரணமாகவே பெருந்தொகையான இளைஞர்களை ஒரே சமயத்தில் நீதிமன்றத்தில் ஆஜர்செய்திருக்கிறார்கள்.

நாட்டின் எதிர்காலத் தலைவர்களாகவும், பொறுப்புள்ள பிரஜைகளாகவும் வளரவேண்டிய இளைஞர்கள் வீதிகளிலும் பொறுப்புடனும் ஒழுங்காகவும் நடந்துகொள்ள வேண்டும்.

சைக்கிள்களில் கும்பலாக சவாரி போவது, பாட்டுப் பாடி கும்மாளம்போடுவது, இளம் பெண்களைக் கண்டதும் விரசமான வார்த்தைகளால் கேலி செய்வது, வயோதிபர்களை முட்டி மோதுவதுபோல் ஒட்டம் காட்டுவது — இவையும் இவைபோன்ற வைகளும் வீதிகளில் நாம் அன்றாடம் காணும் காட்சிகளாக மாறி வருகின்றன.

புயதிஉலகம்,புதியசமுதாயம்,புதியசிந்தனை என்றெல்லாம் பேசியும் எழுதியும் வரும் படித்த இளைஞர்களும் கூட,கூட்டமாக சேர்ந்து விட்டால் வீதி ஒழுங்குகளை மீறி இம்மாதிரியான சேஷ்டைகளில் இறங்கி விடுகிறார்கள். இப்படியான செயல்களினால் இளைஞர்களின் திறமையோ கெட்டித்தனமோ வெளிப்படப் போவதில்லை மாறாக அவர்களின் மதிப்புத்தான் குறையும்.

எனவே பொலிசாருக்கும் நீதி மன்றத்துக்கும் வேலை வைக்காமல் இளைஞர்களும் ஏனையோரும் வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடித்தால் ஏனைய விஷயங்களிலும் ஒழுங்கை கடைப்பிடிக்கும் பழக்கம் ஏற்படும்; கட்டுப்பாடு உருவாகும்.

இளைஞர்கள் சிந்திப்பார்களா?

மாவட்ட மந்திரிகள்

# "மக்களுக்கு அல்ல ஜனாதிபதிக்கே நம்பிக்கையுடன் இருக்கவேண்டும்"

## வி. பொன்னம்பலம் விளக்கம்

(சுழிபுரம்)

"மாவட்ட மந்திரிகளுக்கு மந்திரிசபை மந்திரிகளுக்குரிய அதிகாரம், அந்தஸ்து கிடையாது. பெயரளவில்தான் அவர்கள் மந்திரிகளாக இருப்பர். அரசியற் சட்டப்படி இவர்களுக்கு எந்த அதிகாரமும் இல்லாத காரணத்தால் ஜனாதிபதி வழங்கும் அதிகாரம் இவர்களுக்கு இருக்கும். இவர்கள்மீது தமக்குள்ள நம்பிக்கையைப் பொறுத்தே ஜனாதிபதி அதிகாரம் வழங்குவார். மக்கள் நம்பிக்கையிலும் பார்க்க ஜனாதிபதியின் நம்பிக்கையே இவர்களுக்கு முக்கியமானது"

இவ்வாறு செந்தமிழர் இயக்கப் பொதுச்செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் பண்ணாகம் அண்ணா கலைமன்றத்தின் விசேட பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

பண்டிதர் வி. கதிரவேலு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் சொன்னதாவது!

### நீதிமன்ற மொழி

"இன்றைய அரசியல் நிலை தொடர்பாக இரு அதிமுக்கிய பிரச்னைகளை ஆராயவிரும்புகிறேன். ஒன்று நீதிமன்ற மொழி தொடர்பானசட்டம். மற்றையது மாவட்ட நிருவாகம் பற்றிய அரசின் நிலைப்பாடு.

"இலங்கை குடியரசாகிய பின்னர் முன்னர் ஒருபோதும் இருந்திராத புதியதொரு பிரச்னை தலைநூக்கியது. இதுவே நீதிமன்ற மொழி என்ற பிரச்னையாகும். ஆங்கில மொழி நீதிமன்ற. மொழியாக இருந்தகாலத்தில் இப்படியொரு பிரச்னை இருக்கவில்லை. குடியரசின் கீழ் ஒரு தேசிய இனத்தின் மொழியான தமிழ் மொழிக்கு இல்லாத ஒரு உயர்தனியிடம் இன்னொரு தேசிய இனத்தின்மொழியான சிங்கள மொழிக்குக் கொடுக்கப்பட்டபோதுதான்நீதிமன்ற மொழிப்பிரச்னை தலையெடுத்தது. முன்னைய அரசின்காலத்தில் நடைமுறையிலிருந்த குடியரசு அரசியலமைச்சட்டத்தில் "வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழும் நீதிமன்ற மொழியாக இருக்கலாம்" என்பதே காணப்பட்ட வாசகமாகும்.

இதில் "இருக்கலாம்" என்றிருப்பதை "இருக்கவேண்டும்" என்று மாற்றவேண்டுமென்று தமிழர் கூட்டணி வாதிட்டு வந்தது. கூட்டணியின் தாக்குதலைச் சமாளிக்க முனைந்த முன்னைய அரசாங்கம் அப்போதிருந்த நீதியமைச்சருக்கிருந்த அதிகாரத்தைப்பயன்படுத்தி "நீதியமைச்சர் விரும்பினால் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தமிழை நீதிமன்ற மொழியாக அமுல்செய்யலாம்" என ஒரு சிறுமாற்றத்தைச்செய்தனர். அப்போதிருந்த நீதியமைச்சர் பெரும்பான்மைச் சமூகத்தவர். சிங்களவரைத் தமிழுக்கு இடமளிக்குமாறு அதாவது அவருடைய தயவில் தமிழ்நீதிமன்றங்களில் உலாவ இடங்கொடுக்குமாறு வசதிசெய்தது முன்னைய சட்டம்.

### இன்றையநிலை

ஆனால் இன்றுள்ள நிலைமை என்ன? இன்றைய அரசின் காலத்தில் நீதிமன்றமொழி தொடர்பான சட்டம் முன்னையதைவிடச் சிறிது முன்னேற்றமானது போலத்தோன்றக்கூடும். ஆனால் இதன் உண்மைத் தன்மையை இது நடைமுறைப்படுத்தப்படும் முறையிலிருந்தே நாம் அறியக்கூடியதாக உள்ளது. இப்போதுள்ள நீதியமைச்சர் ஒரு தமிழர். இவருடைய அரசாங்கம் வடக்கு கிழக்கு மாகாணங்களை எவ்வாறுகருதுகின்றதென்பதை நோக்கினால் அதன் நீதிமன்ற மொழி தொடர்பான உண்மை நோக்கு தெளிவாகிவிடுகிறது. வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மன்னாரையும் சேர்த்து மொத்தம் ஆறு மாவட்டங்களை இன்றைய அரசு உருவாகியுள்ளது. இந்த ஆறுமாவட்டங்களில் மூன்று மாவட்டங்களை (திருகோணமலை, வவனியா, மன்னார்) கலப்பு மாவட்டங்களாக அதாவது தமிழரும் சிங்களவரும் கலந்து வாழும் மாவட்டங்களாகப் பிரகடனப்படுத்திவிட்டு ஏனைய மூன்று மாவட்டங்களை மட்டுமே தமிழ் மாவட்டங்களாக விட்டுளளது.

### அரசின் கருத்து

இன்றைய அரசின் கருத்துப்படி நீதிமன்ற மொழியாகத் தமிழ்மொழி பயன்படுத்தப்படலாமென்றால் அது பின்னர் கூறப்பட்ட மட்டக்களப்பு, முல்லைத்திவு, யாழ்ப்பாணம் ஆகிய மூன்று மாவட்டங்களில் மட்டுமே பயன்படுத்தப்படலாம். ஏனையமூன்று மாவட்டங்களிலும் சிங்களமே நீதிமன்றமொழியாக இருக்கும். முன்னைய அரசாங்கத்தில் சிங்களவர் நீதியமைச்சராக இருந்தபோதுங்கூட வடக்குக் கிழக்குக் மாகாணங்களில் நீதிமன்ற மொழியாக தமிழ் இருக்க வசதிதரப்பட்டால்இன்றையஅரசாங்கத்தில் தமிழர் நீதியமைச்சராக உள்ளபோது வடக்குக்கிழக்கு மாகாணங்களில் சில பகுதிகளில் மட்டுமே தமிழ் நீதிமன்ற மொழியாகும் நிலை உள்ளது முன்னைய அரசாங்கம் ஒரு சிங்களவரை நீதியமைச்சராக வைத்துச் செய்யமுடியாமல் விட்டதை இன்றைய அரசாங்கம் ஒரு தமிழரை நீதியமைச்சராக வைத்துச்செய்து முடித்தது ஒரு சாதனை அல்லவா! இது மட்டுமல்ல, இந்த மூன்று மாவட்டங்களிலும் தமிழ் மட்டுமே நீதிமன்ற மொழியாக இருக்கும் நிலை இல்லை! அதாவது இந்த மாவட்டங்களில் தமிழோடு-ஆங்கிலமும் நீதிமன்ற மொழியாக இருக்கலாம் என்பதே இன்றைய சட்டம். இதனை இன்னொரு விதமாகக் கூறினால் இன்று இலங்கையிலுள்ள 24 மாவட்டங்களில் எந்த ஒரு மாவட்டத்திலும் தமிழ் நீதிமன்ற மொழியாக இல்லை. இதுதான் தமிழுக்கு இந்த அரசாங்கம் தரும் "தேசிய மொழி" அந்தஸ்து.

### மாவட்ட மந்திரிகள்

மாவட்ட அமைச்சு என்ற ஏற்பாடு இன்றைய அரசாங்கத்தின் மாவட்ட நிருவாகம் பற்றிய கொள்கையாகும். மாவட்டங்களின் நிருவாகத்தை இந்த அரசு எப்படி நடாத்த விரும்புகிறது என்பதை அறிந்து கொள்வதற்கு மாவட்ட அமைச்சு பற்றிய அரசின் கொள்கை துணை செய்கிறது.

"மாவட்ட அமைச்சர்களை ஜனாதிபதி நியமிக்கலாம்" என்ற வார்த்தையை விட வேறெதுவும் புதிய அரசியற் சட்டத்தில் புதிதாகக் கூறப்பட்டிருக்கவில்லை. எனவே இதிலிருந்து நாம் அறியக் கூடிய ஒரு அடிப்படை உண்மை, பாராளுமன்றத்திலுள்ள அமைச்சர்களைப் போன்றஅதிகாரமும்அந்தஸ்துமுடைய அமைச்சர்கள் இருக்க மாட்டார்கள் என்பதே. பெயரளவில் மட்டுந்தான் அவர்கள் அமைச்சர்களேயன்றி, அமைச்சருக்குரிய உரிமை, அந்தஸ்து, அதிகாரம் இவர்களுக்கு இல்லை. ஜனாதிபதியின் நம்பிக்கையை இழக்கும் பட்சத்தில் அமைச்சர் பதவியையும் இழப்பர், எனவே உண்மையில் இவர்கள் தாம் நிருவகிக்கும் மாவட்டங்களுக்கும் அங்கு வாழும் மக்களுக்கும் பொறுப்பும், நம்பிக்கையும் உள்ளவர்களாக இருப்பார்களென்பதைவிட ஜனாதிபதி ஒருவருக்கே நம்பிக்கையும், பொறுப்புமுள்ளவர்களாக இருப்பார்கள்—இருக்க வேண்டும்.

### தமிழீழ இலட்சியம்

ஜனாதிபதியின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருக்க வேண்டிய மாவட்ட மந்திரி ஒருவர் தமிழர் விடுதலைக்கூட்டணியின் தமிழீழ இலட்சியத்திற்கு உதவமுடியுமா? நிச்சயமாக இம்மாவட்ட மந்திரிப் பதவி எமது இலட்சியத்தை அடைவதற்குத் துணை செய்யாது. வேண்டுமானால் இலட்சியத்தை ஒத்திப் போடுவதற்குத் துணைசெய்யலாம். நாம் இதனைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டுமானால் இந்தமந்திரிப் பதவியை வழங்கும் இந்தஅரசாங்கத்தின் தமிழ் மக்களைப் பற்றிய நிலைப்பாடென்ன என்பதை இன்னுமொருமுறை கவனிக்கவேண்டும். இந்த அரசாங்கம் தமிழ்மக்களின் பிரச்னைகளை இனப் பிரச்னையாக ஏற்றுக்கொள்ளவில்லை. மொழிப்பிரச்னையாக மட்டுமே இவற்றை அணுகுகிறது. இந்த அணுகுமுறை இந்த அரசாங்கததில்

(-5ம் பக்கம் பார்க்க)

# "நவஜீவன ஸ்தாபனம் சகோதரத்துவம் வளர்க்கிறது'

(பரந்தன்)

"பத்தொன்பது வருடங்களுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்ட நவஜீவனம், இன்று இந்நாட்டுக்கும், கிறிஸ்தவ சபைகளுக்கும் அளப்பரிய சேவையைச் செய்துவருகின்றது. இந்த ஸ்தாபனத்தில் இலங்கையில் வாழும் சகல இன மக்களும் கிறிஸ்தவ அடிப்படையில் ஒன்றுபட்டு, ஒரே சகோதரர்போல இன, மத, மொழி வேறுபாடின்றி வாழ்ந்துவருகிறார்கள்."

இவ்வாறு பரந்தன் நவஜீவன ஸ்தாபகர் அருட்திரு. ஏ. சி. தம்பிராசா அடிகள், யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து நவஜீவனத்திற்கு விஜயஞ் செய்த கிறிஸ்தவர்கள் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் அருட்திரு. சாம் டி ஹோர் சிங்டன் அடிகள் தலைமையில் சென்ற குழுவினர் மத்தியில் அருட்திரு. தம்பிராஜா அடிகள் மேலும் பேசுகையில், "இங்கு, எம்மிடம் வந்துள்ள பிள்ளைகளுக்கு நாம் தருமம் செய்யவில்லை. அவர்களைச் சமூகத்தில் நல்லவர்களாக்கி வாழத் தருணம் கொடுக்கிறோம். ஆலய வணக்கம் நம்பிக்கையின் இடமாகும். இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து இப்பிள்ளைகள் இங்கு வந்து நல்ல பயிற்சிகளைப் பெற்றுவருகிறார்கள். ஜெர்மனி நாட்டிலிருந்து கிடைத்த உதவியின் மூலம் கைவிடப்பட்ட நிலையில் எம்மிடம் வந்த பிள்ளைகளுக்கு வாழ்வளிக்கிறோம். இந்தஸ்தாபனத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் தர்மபுரத்தில் 60 ஏக்கர் நிலத்தில் கானான் என்ற வயல் பண்ணை அமைத்துள்ளோம். 'உழவர் ஊர்' என்ற பண்ணையில் எம்மிடம் பயிற்சிபெற்ற வாலிபர்களுக்கு 2 ஏக்கர் நிலம் வீதம் வழங்கி அவர்களைத் தனித்தனி தொழில்செய்து வாழ வழி சமைத்துள்ளோம்" என்றார்.

ஆர்ச்டீக்கன் அருட்திரு சாம் டி. ஹோர்சிங்டன் நன்றி கூறினார். (அரியாலை நிரு.)

பணிந்துபோதல் என்பது மலை அருவியின் வழியாகும். கீழே இறங்கிப் பணிந்து போவதன் மூலம் அதுஎல்லையற்றஅந்தச்சமுத்திரத்தைப் போயடைகிறது

—சுத்தானந்தபாரதி



# தேங்கிக் கிடக்கும் விதைஉருளைக்கிழங்கு!

(யாழ்ப்பாணம்)

விதை உருளைக்கிழங்கு இம்முறை உரிய காலத்திலும்பார்க்க முன்கூட்டியே யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

யாழ், அரசாங்க அதிபரின் தீவிர முயற்சியினாலேயே இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

விவசாயிகள் இதனைப் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட தாமதத்தினால் விதைஉருளைக்கிழங்கு பண்டகசாலையில் தேங்கிக்கிடக்கிறது, விதை உருளைக்கிழங்கு தேவையான விவசாயிகள் தத்தம்பகுதியிலுள்ள கமநலச்சேவை நிலையங்களில் தமக்குத் தேவையான அளவு விதை உருளைக்கிழங்குகளைப் பதிவுசெய்து, உடனடியாகப் பெற்றுக்கொள்ள வழிசெய்யப் பட்டுள்ளது.

ஒருபெட்டி விதை உருளைக்கிழங்கின் (சுமார் 110 இறு,) விலை 525 ரூபா. சிறியதரம், நடுத்தரம். பெரியதரம் ஆகிய எந்தரக விதை உருளைக்கிழங்கின் விலையும் ரூபா 525தான். என்றும் இந்த விலைக்கு மேல் கூடிய விலையில் விதை உருளைக்கிழங்கு விற்பனைசெய்யப் பட்டால் அதுபற்றி உடனடியாக யாழ், அரசாங்க அதிபருக்கு அறிவிக்குமாறும் கேட்கப்படுகின்றனர். (ஊ)

## தொலைபேசி விபரக்கொத்து ஜனவரியில் கிடைக்கும்

[கொழும்பு]

தபால் திணைக்களத்தின் 1979ம் ஆண்டுக்கான புதிய தொலைபேசி விபரக்கொத்து 1979 தைமாதம் விநியோகிக்கப்படவுள்ளது. இதில் மாவட்ட அமைச்சர்களின் பெயர்களும் தொலைபேசி இலக்கங்களும், பிற அண்மைக்காலத் தகவல்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

தபால் திணைக்களத்தினரால் 1973-74ம் ஆண்டுக்கான தொலைபேசி விபரக் கொத்தே இறுதியாக இத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டதாகும்.

தொலைபேசி விபரக்கொத்து செப்டம்பர் மாத இறுதிக்கு முன் விநியோகிப்பதெனத் திணைக்களம் உறுதியளித்துள்ளபோதிலும், உறுதிப்படி விநியோகிக்கமுடியாது போய்விட்டதெனத் தொலைபேசித் தொடர்பு அத்தியட்சகர் திரு. ஏ. லடுலகெட்டி கூறினார்.

புதிய தொலைபேசி விபரக்கொத்து தேவையென 50,000 வாடிக்கையாளர் விண்ணப்பித்துள்ளதாகவும், திணைக்களம் 70,000 பிரதிகளை அச்சிடுமாறு அரச அச்சகத்திடம் கேட்டிருந்த போதிலும் செப்டம்பர் முதல் வாரத்தில் 10,905 பிரதிகளையே அரசு அச்சகத்தினர் அச்சிட்டுத் தந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். [ஊ]

## சமயப் பரீட்சை ஒத்திவைப்பு

(வேலணை)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் 5-ம் திகதி நடாத்தப்படவிருந்த சைவசமயப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணங்களால் பின்போடப்பட்டுள்ளதாகவும் பரீட்சை நடக்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் சபைக் காரியதரிசி திரு, க. சிற்றம்பலம் தெரிவித்துள்ளார்.


# பாலர்களுக்கு பயனுள்ளது

சிறந்த நைலோன் கொண்டு செய்யப்பட்ட "டெக்" ஜூனியர் பற்களின் எல்லாப் பகுதிகளையும் சென்றடைந்து சுத்தம் செய்கிறது.

குழந்தைகளில் சாதாரணமாக சொத்தைக்கு வழிவகுக்கும் பழுப்பை நீக்குகிறது. "டெக்" கொண்டு தினமும் காலையில் முதல் வேலையாகவும், இரவில் நித்திரைக்கு செல்லும் முன்னரும் பல் துலக்கச் செய்யுங்கள்.

சிறுர்களின் பல், முரசு ஆகியவற்றை உறுதியாகவும், சுகமாகவும், வைத்திருக்க - "டெக்"

"டெக் ஜீனியர்"
அவனுடைய முதல்
பல் துலக்கியாக
இருக்கட்டும்



விநியோகஸ்தர்கள்:-
CIC கெமிக்கல் இன்டஸ்றீஸ் (கொழும்பு) லிட்.
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு-1.
தொலைபேசி: 28421-5

GRANT K & E 709


# "ஆட்சிமன்றத்தில் நாமிருப்பது அநீதிகளை சுட்டிக்கட்டவே"

## காவலூர் எம். பி. பேச்சு

[வேலணை]

"நாம் தமிழ் ஈழத்தை உருவாக்கப் போராடுவதுடன் தமிழ் மக்களுக்கு இந்த அரசாங்கம் இழைக்கும் அநீதிகளையும் சுட்டிக்காட்டுவதற்கும், தமிழ்மக்களின் வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் ஆட்சிமன்றத்தைத் தளமாகக்கொண்டு போராட வேண்டியுள்ளது."

இவ்வாறு மண்டைதீவில் எரிபொருள் விற்பனவு நிலையமொன்றைத் திறந்துவைத்து உரையாற்றிய காவலூர் எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "இந்த அரசாங்கமும் முன்னைய அரசாங்கத்தைப் போலவே கடற்றொழிலாளரைக் கவனியாது நடக்கின்றது. கடற்றொழிலாளர்களுடைய குறைகள் பல ஆண்டுகளாகத் தீர்க்கப்படாதிருந்துவருகிறது. கடற்றொழிலாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களையோ, அதன் கிளைகளையோ ஊக்குவிப்பதற்கோ அங்கு அங்கம் வகித்துவரும் உறுப்பினர்களுக்குக் கடன் வசதிகளைக் கொடுத்து உதவிகளைச் செய்வதற்கோ ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் முற்படவில்லை.

"தனிப்பட்ட வியாபாரிகளுக்கும், பணக்காரர்களுக்கும் உதவிசெய்யும் அரசாங்கமன்றித் தொழிலாளர்களுக்கு உதவிசெய்யும் அரசாங்கமென இவ்வரசாங்கத்தைக் கூறமுடியாது. இதனாலேயே கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் முன்பிருந்த வாய்ப்புகளை இழந்துவிட்டன.

ஊர்காவற்றுறைக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. கே, வைத்தியநாதன் உட்பட மற்றும் பலர் உரை நிகழ்த்தினார்கள். [உ]

## இன்றைய இராசிப்பலன்

ஐப்பசி மாதம் 18-ந் திகதி

சனிக்கிழமை

(4-11-78)

**மேடம்:-** கருடப்பார்வை வட்டமிடும், ஆயுதபீடைக்கு இடமுண்டு, தெய்வநம்பிக்கையுடன் சமயோசித புத்தியும் வேண்டும்.

**இடபம்:-** கனிவாவ சம்பவங்கள் இடம் பெறும், காதலர்களுக்கு கனகுஷியான தினம், சிலருக்கு திடீர் திருமணத்திற்கும் இடமேற்படும்.

**மிதுனம்:-** ஏக்கத்தின் சாயல் தாக்கும், தொழிலில் தயக்கநிலை தென்படும், உள்ளக்கிடக்கைகளை எவரிடமும் சொல்லாதிருக்கவும்.

**கடகம்:-** இரக்கசிந்தை மேலிடும், சிலருக்கு பொதுசனத் தொடர்புக்கும் இடமுண்டு, பிதாவழி ஆதரவும் கிடைக்கும்.

**சிங்கம்:-** வணிகர்களுக்கு வியாபார விருத்திக்கிடமுண்டு, சிலருக்கு இடமாற்றமும் ஏற்படும், செலவினங்கள் கைக்கடங்கியதாகவிருக்கும்.

**கன்னி:-** இளமை நினைவுகள் நிழிலாட்டம் போடும், பொருள் வரவுக்கும் இடமுண்டு, காதல் கணைதாக்கும், மகிழ்ச்சி தென்படும்.

**துலாம்:** வாய்வுக் கோளாறு உடல் நலத்தைப் பாதிக்கலாம், பொருள் விரயமாவதற்கிடமுண்டு, புதிய முதலீடுகளைத் தவிர்த்துக் கொள்ளவும்.

**விருச்சிகம்:-** வெளியிடத் தொடர்புகளில் மந்தநிலை தென்படும், தொழில் சம்பந்தமான கவலை அதிகரிக்கலாம், திடீர் பயணத்திற்கும் இடமுண்டு;

**தனுசு:-** கனிவான நினைவுகள் தலை தூக்கும், காதல் விவகாரங்களுக்கும் இடமுண்டு, இனிதான பேச்சின் மூலம் எல்லோரையும் வசீகரிப்பீர்கள், தனச்சிறப்புண்டு.

**மகரம்:-** எதிர்பார்த்த வேதனம் இடையில் தடைப்படலாம், சிலர் வாழ்க்கையில் கடன் தொல்லை அதிகரிக்கும், சகோதர வழியால் சஞ்சலத்திற்கிடமுண்டு.

**கும்பம்:-** வாகனம் செலுத்துவோருக்கு நன்மதிப்புக் கிடைக்கும், தாய்வழிப் பொருள் வரவிற்கும் இடமுண்டு, கல்வித்துறையில் உற்சாகம் பிறக்கும்.

**மீனம்:-** அறவழிகளில் மனநாட்டம் செல்லும், புத்திரரால் மகிழ்ச்சிக்கிடமுண்டு, மனை வாழ்க்கையில் சுவையான சம்பவங்கள் இடம் பெதும்.

**சோதிடக்கலாநிதி**
**திருமலை க. வேலுப்பிள்ளை**

### அபிவிருத்திக்குரிய பணம்:

## தாமதமுன்றி செலவிட வட்டு. எம். பி. கோரிக்கை

[பண்டதரிப்பு]

இவ்வருடப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் தமது தொகுதியில் பல்வேறு திட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்ட பணத்தை, எதிர்வரும் மார்கழி மாதத்திற்கு முன்பு பயன்படுத்திக் குறிப்பிட்ட வேலைகளைத் தாமதமின்றிச் செய்துமுடிக்குமாறும், இல்லாவிட்டால் அரசாங்கத்திற்கு அப்பணம் திரும்பிச் சென்றுவிடுமென்றும் வட்டுக்கோட்டை எம் பி. திரு. தா. திருநாவுக்கரசு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பிவைத்துள்ள அவசரக் கடிதத்தில் ஒதுக்கப்பட்ட பணத்தைப் பயன்படுத்தி வேலைகளைச் செய்துமுடிப்பதில் ஏதாவது தடங்கல்கள், கஷ்டங்கள் ஏற்பட்டால் தம்முடன் தொடர்புகொண்டு அவற்றைத் தீர்த்துக்கொள்ளுமாறும் கேட்டுள்ளார். [உ]

## எடைகுறைந்த பாண்: அபராதம் ரூபா 100

[பண்டத்தரிப்பு]

எடைகுறைந்த பாணை விற்பனைசெய்ததாக, விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளினால் தாக்கல்செய்யப்பட்டவழக்குஒன்று மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரியைக்குற்றவாளியாகக்கண்ட நீதிபதி 100 ரூபா அபராதம் விதித்து தீர்ப்புவழங்கினர்.

காங்கேசன்துறையைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை லெனட் என்னும் 21 வயது இளைஞர் தமது கடையில் ஒன்றரை அவுன்ஸ் நிறைகுறைந்த பாணை விற்பனைசெய்ததாகக் குற்றஞ்சாட்டி விலைக்கட்டுப் பாட்டுஅதிகாரிகளினால்தொடரப்பட்ட இவ்வழக்கில் எதிரி சார்பில் சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு ஆஜரானர்.

எதிரியான இளைஞர் 21வயதுடையவரென்றும் இதற்கு முன்பு ஒரு குற்றமும் செய்யாதவரென்றும் சட்டத்தரணி திருநாவுக்கரசு நீதிபதியிடம் சுட்டக்காட்டியதை அடுத்து நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி எதிரியை கடுமையாக எச்சரித்து 100 ரூபா அபராதம்விதித்துத் தீர்ப்பு வழங்கினர். [உ]

## புல் நாற்று இலவசம்

(யாழ்ப்பாணம்)

மாட்டுப்பண்ணைக் காரர்களின் நலனை முன்னிட்டு நல்லினப் புல் நாற்றுகளை மில்க்வைற் ஸ்தாபனத்தார் தமது தொழிற்சாலையில் வைத்து இலவசமாக விநியோகிக்கின்றனர். புல் உற்பத்தி செய்ய விரும்புபவர்கள் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். [அ]

## வவனியாவில் பனை உற்பத்தி ஆர்வம்

(யாழ்ப்பாணம்)

வவனியாவில் அகதிகள் குடியேற்றத் திட்டங்களில், பனை உற்பத்திக்கு 14 ஆயிரம் பனம் விதைகள் தேவைப்படுவதாகவும், அவற்றை விநியோகித்து உதவுமாறும் மில்க்வைற் ஸ்தாபனத்தை சம்பந்தப்பட்டவர்கள் கேட்டுள்ளார்களாம்.

இவ்வேண்டுகோளை ஏற்றுப் பனம்விதைகள் விநியோகிப்பதற்குப் போதிய பனம் விதைகள் இல்லாதிருப்பதாகவும், பொதுமக்கள் முன்வந்து இப்பணி தடையின்றி நடைபெறுவதற்குப் பனம் விதைகள் சேகரித்துத் தமக்கு உதவுமாறும் மில்க்வைற் அதிபர் திரு க. கனகராசா வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)

## பதவிஉயர்வு

[அரியாலை]

கல்முனை பட்டினசபையில் மின்முகாரியாகக் கடமையாற்றிய திரு. தி. ஜெகநாதன் மின்தொழில்நுட்ப அலுவலராக யாழ். மாநகரசபைக்கு பதவியுயர்வு பெற்று இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்,

யாழ். மாநகரசபையின் மின்சாரப்பகுதியில் 10வருடங்களுக்கு மேலாக ஊழியராகப் பணிபுரிந்த திரு. எஸ். இராஜகுலேந்திரன் மின் இணைப்பாளராகப் பதவிஉயர்வுபெற்று யாழ். தட்டாதெரு உபமின் நிலையத்தில் பணிபுரிகிறர். [உ]

## மானிப்பாய் வெற்றி

[அரியாலை]

மானிப்பாய் இந்துக்கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டிகளுக்கும், யாழ். பரியோவான் கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டிகளுக்குமிடையில் மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் முதலாம்பிரிவில் இரண்டு கோஷ்டிகளும் தலா 4-4கோல்களைப் போட்டன. இரண்டாம்பிரிவுப்போட்டியில் 1-0 கோலாலும், மூன்றும் பிரிவுப் போட்டியில் 1-0 கோலாலும் மானிப்பாய் இந்துக்கல்லூரிக் கோஷ்டி வெற்றிபெற்றது.

**நாகம்ஸ்**
(சுன்னுகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
சிவகுமார்-லோறன்ஸ்
**மேல்நாட்டு மருமகள்**

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம் ஜி. ஆர்-விஜயா
**நல்லநேரம்**

**Rio** (Jaffna) Phone: 7607
Dily 4 Shows
**Great Scout**
Family Entertainment


## போலதன் விழா நாடத்த முடிவு

(புலோலி)

வடஇலங்கை பண்பாட்டுக் கழகத்தினர் எதிர்வரும் கிறிஸ்மஸ் தினத்தையடுத்து 'போலதன் விழா''வினை நடாத்தவுள்ளனர்.

டச்சு புரட்டஸ்ஸாந்து மதத்தை இங்கு கொண்டு வந்த பாதிரியாரான போலதன் என்பவரது பருத்தித்துறை விஜயத்தை அடிப்படையாகக் கொண்டு வடமராட்சியின் கிறிஸ்தவ பாரம்பரியத்தை வெளிக்கொணரும் வகையிலேயே இவ்விழா நடைபெறவுள்ளது.

இதற்கான சகல நடவடிக்கைகளையும் கழக பொதுச் செயலாளர் திரு.எம். ஸ்ரீபதி மேற்கொண்டுள்ளார். (க)


**ராஜா** (யாழ் நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-30, 9-45
ஃ மரிக்கார் ராமதாஸ்
ஃ ஹெலன்குமாரி
மற்றும்பலர் நடித்த சிறந்த ஹாஸ்ய திரைவிருந்து!
**ஏமாளிகள்**

**ஸ்ரீதர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30 & 9-45
எம். ஜி. ஆர். --- சரோஜாதேவி
நடித்த
**திருடாதே** [புதியபிரதி]

**சாந்தி** (யாழ்ப்பாணம்)
போன்: 7642.
சரி 10-30, 2-30, 6-30, 9-45
2-வது ஜனத்திரள் வாரம்
ஏ. வி. எம். ராஜன், நிர்மலா, சந்திரபாபு, மனோரமா
**அவள்** புதிய பிரதி வண்ணப்படம்

**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்]
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
**பாக்கியலட்சுமி**
(புதியபிரதி)

**லிடோ** (யாழ்.நகர்)
போன் 7698 தினசரி 4 காட்சிகள்
**எங்கள் தங்க ராஜா**

**வின்ஸர்** [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
2-வது ஜனத்திரள் வாரம்
ஃ சிவராம் ஃ சந்திரகலா ஃ தனரத்தினம்
ஃ செல்வம் பெர்ணண்டோ ஃ டொன்பொஸ்கோ
ஆகியோர் நடித்த
சமத்கார பிலிம்ஸ்
**அநுராகம்**

**மனோகரா** [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
பாலாஜி - விஜயகுமாரி
நடித்த
**போலீஸ்காரன் மகள்**
(புக்கம் புதிய பிரதி)

175வது தின வெள்ளி விழாவை நோக்கி வீறுநடை போடுகிறன்.
தினசரி 4 காட்சிகள்
**ராணி** [யாழ். நகர்]
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
**உத்தமன்** (ஈஸ்ட்மன் கலர்)

**REGAL** (Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00&9-30 p.m,
SOPHIA LOREN in
'Scandal in Sorrento' [Colour Scop]


## பிரி-ஸ்தானிகர் வதிரி விஜயம்

(நெல்லியடி)

பிரிட்டிஷ் ஸ்தானிகர் டேவிற் அயர்ஸ் வதிரி ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமத்திற்குத் தமது மனைவி சகிதம் விஜயம் புரிந்தார்.

ஸ்தானிகரையும் அவரது மனைவியையும் பரமானந்தா சுவாமிகளும் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் எ. குணநாயகம் டாக்டர் நவரத்தினராஜா .பி. மாணிக்கவாசகர் ஆகியோரும் வரவேற்றுர்கள்.

ஸ்தானிகர் பரமானந்தா ஆச்சிரமத்தில் உள்ள மாதிரி விவசயப்பண்ணை சிறுவர் வயோதிபர் தங்குமிடங்கள் என்பனவற்றை பார்வையிட்டார். அத்துடன் ஆச்சிரமத்தின் நிர்வாக முறையும் கேட்டறிந்தார். வயோதிப ஆண்கள் தங்குவதற்காக சுமார் ஒருலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுவரும் கட்டிடத்தையும் பார்வையிட்டார்.

ஆச்சிரமத்தில் உள்ள சிறுவர்கள் தமது சொந்த முயற்சியில் கற்ற கலைநிகழ்ச்சிகளை தயாரித்தளித்தார்கள்.

இங்கு ஸ்தானிகர் எயர்ஸ் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது பரமானந்தா ஆச்சிரமம் இலங்கையில் முன்மாதிரியான ஒரு நிறுவனமாகும் சிறுவர்களுக்கும் வயோதியர்களுக்குமென ஒன்ருக அமைந்து விளங்குவது இந்த ஆச்சிரமம் ஒன்றே இங்குள்ள சிறுவர்களின் நிகழ்ச்சிகளும் நிர்வாக முறைகளும் போற்றப்பட வேண்டியதாகும். இங்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திக்கு என்னுலான உதவிகளை செய்ய சித்தமாக உள்ளேன் என்றுர். (உ)

## எதிரிகள் விடுதலை சாட்சிக்கு எச்சரிக்கை

(வேலணை)

தாக்குதல் வழக்கொன்றில் எதிரிகளை விடுதலை செய்த நீதிபதி; பொய்ச்சாட்சியம் அளித்ததற்காக சாட்சி ஒருவரைக் கடுமையாக எச்சரித்தார்.

காரைநகரைச் சேர்ந்த சின்னப்பு சோமு என்பவரை சாராயப் போத்தலாலும், கைகளாலும் தாக்கியும் குத்தியும் காயம் விளைவித்ததாக அதே இடத்தைச் சேர்ந்த நா. சின்னத்தம்பி, வே. அருணசலம் ஆகிய இருவர்மீதும் தொடரப்பட்ட வழக்கு ஊர்காவற்றுறை நீதிபதி திரு. வி.ஜெகசோதி முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது விசாரணையின் நடுவில் எதிரிகளை விடுதலை செய்தார்.

பொய்ச்சாட்சியம் அளித்ததாக கந்தையா கதிரமலை என்ற சாட்சியை கடுமையாக எச்சரித்துநீதிபதிவிடுதலைசெய்தார்.

வழக்காளி தரப்பில் சட்டத்தரணி செல்வி ந. நவசிவாயமும் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி நா. ஸ்ரீகாந்தாவும் ஆஜராகியிருந்தனர். [உ]

## மக்களுக்கு...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வர்க்க நிலைப்பாட்டைப் பொறுத்தவரை பொருத்தமானதே. முதலாளித்துவ அரசு எதுவும் இன சமத்துவத்தை ஏற்றதில்லை அவை இனப்பிரச்னைக்கு முன்வைக்கும் தீர்வுசிற்றினத்தைப் பேரினத்துடன் சங்கமமாக்குவதாகும். இந்த அரசாங்கமும் இத்தகைய அணுகுமுறையுடையதே. இந்த அரசாங்கம் சிருஷ்டித்துள்ள மாவட்ட மந்திரிப் பதவி இனசங்காரத்துக்கு வழிகோலும் முதற்கட்டமாகும். எனவே தான் இந்த மந்திரிப்பதவி கூட்டணியின் இலட்சியத்துக்கு உதவாதென்பது எனது கருத்தாக உள்ளது'' என்றுர். (உ)

## "குடியேற்றம், உணவுஉற்பத்தி நல்ல நோக்குடன் செயல்படவேண்டும்''

(யாழ்ப்பாணம்)

,வெளிக்கள உத்தியோகத்தர்களில் சிலர் தரத்தினருக்கு சிங்களமொழித்தகைமை நிபந்தனையை நீக்கவேண்டும். மாவட்ட ரீதியான சகலபிரச்னைகளுக்கும் மாவட்டத்தின் சூழ்நிலைகளை அனுசரித்தே முடிவுகளை எடுக்க மாவட்ட ரீதியாக இயங்கும் தொழிற்சங்கக் கிளைகளுக்கு அதிகாரம் உண்டு. இவ்வதிகார வரம்பு அத்தொழிற்சங்கம் சார்ந்திருக்கும் அரசியல்கட்சியின் கட்டுப்பாட்டுக்கு அமையினும், தார்மீக ரீதியில் சுதந்திரமாகச் செயல்பட உரிமையுண்டு'

இவ்வாறு கிளிநொச்சிகாணி அலுவலக தொழிற்சங்கப்பணிமனையில் நடைபெற்ற யாழ். மாவட்ட காணி ஆணையாளர் திணைக்கள தேசியபொதுஊழியர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய தேசிய பொது ஊழியர் சங்கத்தின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளர் திரு. ஆ. ம. அமிர்தலிங்கம் கூறினுர்,

மேலும் அவர் பேசுகையில்: யாழ். மாவட்டத்தில் குடியேற்றம், உணவு உற்பத்தி ஆகிய துறைகளில் பாரபட்சமற்ற நன்நோக்குடன் செயல்பட்டு யாவரும் எமது மக்களையும், எமது தாய்நாட்டையும் முன்னேற்ற வழிவகுப்போம்' என்றுர். (ஊ)

## நியமனம்

(பண்டத்தரிப்பு)

திட்ட அமுலாக்க அமைச்சு நாட்டிலுள்ள தேர்தல் தொகுதிகள் தோறும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் வரும் அபிவிருத்தி திட்டங்களை அமுல் நடத்துவதற்கு பொறுப்பாக அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நியமித்து வருகின்றது.

இத்திட்டத்தின் கீழ் வட்டுக்கோட்டை தொகுதிக்கு அபிவிருத்தி உத்தியோகத்தராக திரு. க. தர்மராஜா நியமிக்கப்பட்டுள்ளார், வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசுவின் சிபார்சின் பேரில் இவர் நியமிக்கப்பட்டிருக்கிறுர். இவர் தமது கடமைகளை சித்தன் கேணியிலுள்ள எம். பி. யின் அலுவலகத்தில் இணைத்து ஆற்றி வருகின்றுர். [உ]

## நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ,காணி ஆணையாளர் திணைக்கள தேசிய பொது ஊழியர் சங்க நிர்வாகக்குழுவுக்குப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் திரு. ஆ. ம. அமிர்தலிங்கம் உபதலைவர்கள் திரு. ஜி. சவரிமுத்து திரு. பி லிங்கமூர்த்தி நிர்வாகக்காரியதரிசி திரு. பொ. கணேசலிங்கம் அமைப்புக்காரியதரிசி திரு. ஏ. நீலகண்டன் தனதிகாரி திரு. ஆர். பூபாலசிங்கம் பிரிவுக்காரியதரிசிகள்: யாழ்ப்பாணம் திரு.வி. பாலசுப்பிரமணியம் பூநகரி திரு. ரி. கோபாலரத்தினம் கிளிநொச்சி திரு. எஸ். பாலசிங்கம் வவனிக்குளம் திரு. கே. அருணசலம், விசுவமடு திரு. கே. எஸ். சண்முகலிங்கம். (ஊ)

## இப்பகுதி மக்களுக்கு விவசாயக்கடன் கிடைக்காது?

(மட்டக்களப்பு)

படுவான்கரை விவசாயிகளுக்கு நடப்புவருட விவசாயக் கடன் வழங்கப்படமாட்டாது என்றும் கடந்தபோகக்கடனை திருப்பிச் செலுத்தியவர்களுக்கும் எவ்வித சலுகைகளும் கடனும் கிடைக்காது எனவும் அறியப்படுகிறது.

கடந்த பெரும்போகச் செய்கைக்கடனை ஈச்சந்திவு -.கன்னன்குடா ப.நோ.கூ சங்கம் 19 லட்ச ரூபாவை மக்கள் வங்கியிடமிருந்து பெற்றிருந்தது. இக்கடனில் 20வீத கடனை இதுவரை மேற்படி வங்கிக்குச் செலுத்தாத சங்கங்களுக்குக் கடன் வழங்கப்படவில்லையாம்.

மேற்படி சங்கம் இக்கடனை செலுத்தவில்லை. எமது சங்கமும் விவசாயக்கடன் வழங்க முடியாதநிலையில் இருக்கிறது என்று பொதுமுகாமையாளர் திரு. கே ஹீன் நிலமை நமது நிருபரிடம் தெரிவித்தார். [உ]

## மூளாய் வெற்றி

[பண்டத்தரிப்பு]

மூளாய் கெருடா விளையாட்டுக் கழகத்துக்கும் சுழிபுரம் பருளாய் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் மூளாய் கெருடா விளையாட்டுக் கழகம் 8—1 கோல்களால் வெற்றியீட்டியது.

இப்போட்டி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. (உ)

## நடேஸ்வரா வெற்றி

[பண்டத்தரிப்பு]

யாழ். பாடசாலைகள் விளையாட்டுச் சங்க ஆதரவில் பண்டத்தரிப்பு இந்துக கல்லூரிக்கும் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நடேஸ்வராக் கல்லூரி 6—1 கோல்களால் வெற்றி பெற்றது. இப்போட்டி காங்கேசன்துறை பட்டணசபை விளையாட்டரங்கில் நடைபெற்றது. நடுவராக திரு. எஸ். அருமைநாயகம் கடமையாற்றினுர். [உ]

## வட்டு. லயன்ஸ்கிளை நடவடிக்கை

[பண்டத்தரிப்பு]

சங்கரத்தைக் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நூல் நிலையத்திற்கும், வாசிகசாலைக்கும் மின்னொளி வழங்க உதவுவதற்கு 'வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் முன்வந்துள்ளது.

தேவையான நிதியை கழக உறுப்பினர்களிடமிருந்தும் பொது மக்களிடமிருதும் திரட்டி, விரைவில் மின் இணைப்பு வேலைகளை ஆரம்பிப்பதற்கு மேற்படி லயன்ஸ் கழகத்தின் செயலாளர்சட்டத்தரணி க. குணரத்தினம் துரித நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். [உ]

## மகாநாடு

(கொழும்பு)

சமூக குறைபாடுகள் ஒழிப்புச் சம்பந்தமாக ஆராயும் பொருட்டு மகாநாடொன்று இம்மாதம் 12ம் திகதி நடைபெறவிருக்கிறது.

இம்மகாநாட்டிற்கு இலங்கையின் பலபாகங்களிலிமிருந்தும் டல பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவிருக்கின்றனர் என தெரியவருகிறது ]வேலணை நி]

## கூட்டம்

(வேலணை[

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் 88-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 12-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

# "ஆசிரியருக்கு நீதியான சம்பளத்திட்டம் வேண்டும்"

## தமிழாசிரியர் சங்கக் கோப்பாய் கிளைக் கூட்டத்தில் பேச்சு

(யாழ்ப்பாணம்)

"ஆசிரியர்களுக்கு நீதியான சம்பளத்திட்டம் வேண்டும்" என்று இலங்கைத் தமிழாசிரியர் சங்கக் கோப்பாய் கிளைத் தலைவர் திரு. அ. பஞ்சாட்சரம் கிளையின் நிர்வாகசபைக் கூட்டத்தில் தலைமை தாங்கிப் பேசுகையில் கூறினார்.

கோப்பாய் நாவலர் பாடசாலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"சம சம்பளத்துக்காகப் பதினைந்து இருபது வருடங்களாகக் குரல்கொடுத்த ஆசிரியர்களுக்குச் சமசம்பளத்திட்டத்தில் அவரவர் சேவைக்கேற்ற முன்னேற்றமில்லை. சேவையிற்கூடியவர்கள் தராதரப்பத்திரங்கள் ஐந்து ஆண்டுகளின்பின் முதலாம் வகுப்புக்கு உயர்த்தப்பட்டதால் அதிலும் இருவருடங்கள் நஷ்டம் அடைகிறார்கள்.

புதிய சம்பளத்திட்டத்தினால் சமீபத்தில் பயிற்சி பெற்று வெளியேறிவர்களே ஓரளவு பயன்பெற்றுள்ளனர். இது மகிழ்ச்சிக்குரியது. இது விஷயத்தில் அரசைப்பாராட்ட வேண்டும். சகல ஆசிரியர்களும் பயனடையக்கூடிய விதத்தில ஆசிரியர்களுக்குப் புதிய சம்பளத்திட்டம் ஒன்றை நீதியான முறையில் வகுக்க வேண்டுமென்று ஆசிரியர் சங்கங்கள் ஏகோபித்துக் குரல் எழுப்பவேண்டும்".

சேவையிற் கூடியவர்கள் 12 ரூபா படியேற்றத்தைப் பெற சேவையிற் குறைந்தவர்கள் 15 ரூபா படியேற்றத்தைப் பெறும் நிலையையும் சம்பளத்திட்டம் வகுத்துள்ளது. இந்த விஷயத்திலும் சேவையிற் கூடியவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நாலாம் ஐந்தாம் தர அதிபர்களுக்கான சம்பளத்திட்டம் மிகவும் சிறிய சலுகையையே வழங்கியுள்ளது. ஆயின் உதவி ஆசிரியர்கள சம்பளத் திட்டத்தில் போதியளவு முன்னேற்றம் இல்லாதிருப்பது வேதனைக்குரியது" என்றார்.

வருடாந்தக் கூட்ட ஒழுங்குகள் குறித்து செயலாளர் திரு.கி. சிவானந்தமும் எடுத்துரைத்தார்.

கோப்பாய்க் கிளையின் வருடாந்தக்கூட்டத்துக்குத் தாய்ச்சங்க உத்தியோகத்தர்களையும் கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரியையும் அழைப்பதெனத் தீர்மானங்கள் நிறைவேறின. (உ)

## சுட்டுக்கொலை

[அம்பாறை]

அம்பாறை மாவத்தை என்னும் இடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை குமாரசாமி என்பவர் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்

இக்கொலையைப் புரிந்தவரைப் பொலிசார் தேடிவருகின்றனர் (உ

## சந்தேகநபரை தேடி வலை வீச்சு

[பாணந்துறை)

பாணந்துறையில் உள்ள வீடொன்று உடைக்கப்பட்டு 27,440 ரூபா பெறுமதிமிக்க நகைகள் பணம் என்பன திருடப்பட்டது தொடர்பாக நந்தசேன என்பவரைப் பொலிஸார் தேடி வலைவிரித்துள்ளனர் (உ)

## கிழக்கிலங்கையின்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கின்றன விடுகளிலும், வர்த்தகநிலையங்களிலும் கறுப்பு, வெள்ளைக் கொடிகள் தொங்கவிடப்பட்டிருக்கின்றன. பாடசாலைக் கட்டிடங்களிலும் வெள்ளைக் கொடிகள் தொங்கவிடப்பட்டுள்ளன.

தமது 79வது வயதில், நேற்று முன்தினம் காலை தமது இல்லத்தில் காலமான புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, முத்தமிழ் வித்தகர் விபுவாநந்தஅடிகளாரின் பின்னர் கிழக்கிலங்கையின் ஒளிவிளக்காகத் திகழ்ந்தவர்.

காலஞ்சென்ற புலவர்மணிக்கு இறுதி அஞ்சலிசெலுத்தும்பொருட்டு, நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் மக்கள் வந்துள்ளனர் அறிஞர் பெருமக்களும் நேரில் அஞ்சலி செலுத்தினர்.

## பாடசாலை......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்காலிகமாக தங்கும் இடவசதிவேண்டி உதவி அரசாங்க அதிபர்கள், சமூகசேவைப் பகுதி உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்கும் இடத்து பாடசாலைகளை அத்தேவைக்காக அவர்களுக்கு கொடுத்துதிணைக்களத்திற்கு அறிவிக்குமாறு கல்வியதிபதி பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பியுள்ள அறிவித்தலில் தெரிவித்துள்ளார். [இ]

## ஆசிரியர் கூட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியில் இன்று நடைபெறவிருந்த இலங்கைத்தமிழர் ஆசிரியர்சங்க கோப்பாய்க் கிளையின் வருடாந்தப்பொதுக் கூட்டம், கடும்மழை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது இப் பொதுக்கூட்டம் இன்னொருதினம் நடைபெறுமென்று கிளைத்தலைவர் திரு. அ பஞ்சாட்சரம் அறிவித்துள்ளார்

### சமயபாட வகுப்புகள்

யாழ். திருமுறை மன்றம் நடத்தும் திருமுறை- பண்ணிசை சைவசமயபாடவகுப்புகள் ஆரம்பவிழாவும் மழை காரணமாக எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமைவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

...

## நந்தாவில்குளம் நிரம்பி வழிந்தது

[கோண்டாவில்]

நந்தாவில் குளம் நிரம்பி வழிந்து பெருக்கெடுத்ததினால் சுற்றாடலிலுள்ள வீடுகளினுள் வெள்ளம் புகுந்தது.

இதனால் தலையாளியிலுள்ள சுமார் 50 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன.

யாழ். வளாகத்திற்கு அருகிலுள்ள கலட்டி என்ற இடமும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு, அதனைச்சுற்றியுள்ள வீடுகளினுள்ளும் நீர் புகுந்துள்ளது சேர். பொன். இராமநாதன் வீதியும் வெள்ளத்தினால் மூடப்பட்டமையினால் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது இத்துடன் அருகில் உள்ள புகையிரதப்பாதைமுற்றாக நீரில் மூழ்கிவிட்டது.

திருநெல்வேலி சிவன்கோயிலுக்கு முன் உள்ள பரவைக்குளம் நிரம்பியதனால் மணல் தரைஒழுங்கையிலுள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இப் பகுதியிலுள்ள சில வீட்டுச் சுவர்களும் இடிந்துவிழ்ந்துள்ளன.

## யாழ்.குடாநாட்டு...

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

காசநோயாளர் நிதி கூட்டப்படவேண்டும் என்று, நல்லூர் எம் பி கேட்டுக்கொண்டார் அங்கவீனர்களுக்கு 3சில்லுச் சைக்கிள் வழங்குமாறும் நல்லூர் எம் பி கேட்டபோது இதற்கு நிதி ஒதுக்கவில்லையென்றும், எத்தனை சைக்கிள் தேவையெனத் தெரிவித்தால் அதற்கான நிதி ஒதுக்கப்படுமென்று அமைச்சர் கூறினார்

இலாகாவிலுள்ள தற்காலிக ஊழியரை நிரந்தரமாக்குமாறு நல்லூர் எம் பி கேட்டபோது தொடர்ச்சியாக 5 வருடம் சேவையாற்றியவர்கள் பற்றி கவனிக்கப்படலாம் என செயலாளர் கூறினார்

சாவகச்சேரி எம் பி திரு வி என் நவரத்தினம், சாவகச்சேரித்தொகுதியிலுள்ளவயோதிபர் இல்லத்தில் சிற்றூழியருக்கு சிங்களத்தேர்ச்சி கேட்கப்படுவதாகவும் அவர்களுக்கு சிங்கள தேர்ச்சி அவசியமில்லையென்றும் கூறினார்.

சாவகச்சேரித் தொகுதியில் சமூகசேவைப்பகுதி உதவி கோரி தம்மிடம் 500 பேர் விண்ணப்பித்ததாகவும் அவர்களுக்கு உதவியளிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

ஊழியர்களை நியமிக்கும் போது உள்ளூர் வாலிபர்களுக்கு இடமளிக்கவேண்டும் என சாவகச்சேரி எம்,பி, திரு வி என் நவரத்தினம் கூறிய போது அந்தந்தப்பகுதி எம்பிக்களின் சிபார்சின் பேரில் உள்ளூர் வாலிபர்களுக்கு நியமனம் வழங்கப்படும் என்று செயலாளர் உறுதியளித்தார்

இம்மாநாட்டில், மானிப்பாய் எம் பி தருமலிங்கம், யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. கே சிவஞானம், சமூகசேவைகள் யாழ் கிளை அதிபர் திரு கங்காதரன், மற்றும் சமூக. சேவை பகுதி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர் (க)

## யாழ்.குடாநாட்டில்வெள்ளம்

1-ம் பக்கத் தொடர்ச்சி[

கிறது.

### மக்கள் வெளியேற்றம்

பொம்மைவெளிப் பகுதியில் வெள்ளம் புகுந்துள்ளதால் மக்கள் குடிபெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்கு சென்றுள்ளனர்.

சுகவீனமுற்றிருந்த யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு கே சிவஞானம் நேற்றுக் காலை மாநகரசபைக்கு வந்து இரு லொறிகளில் பல ஊழியர்களுடன் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று தேவையான உதவிகளை செய்தார்.

### கடைகள் பூட்டப்பட்டன

சுமார் ஐம்பதிற்கும் மேற்பட்ட இளைஞர்கள் கொட்டும் மழையில் அலவாங்கு, இரும்புக் கம்பிகளுடன் யாழ் நகரில் பல இடங்களுக்குச் சென்று ரோட்டை வெட்டி வெள்ளத்தை கடலுக்குபாய்ச்சுவதில் ஈடுபட்டிருந்தனர், யாழ்ப்பாணத்தில் பெரும்பாலான கடைகள் பூட்டப்பட்டிருந்தன

சாவகச்சேரி சந்தை பொலிஸ் நிலையத்தை சுற்றி வெள்ளம் காணப்பட்டது கைதடி வயோதிபர் இல்லம், அனாதை இல்லாம் வெள்ளத்தால் சூழ்ந்துள்ளது, பல இடங்களில் 3 அடி வெள்ளத்தில் வீதி மூழ்கியுள்ளது.

### மாணவர் வரவு குறைவு

யாழ்ப்பாணத்தில் கல்லூரிகளுக்கு மாணவர் வரவு குறைவாக இருந்ததால் கல்லூரிகள் நடைபெறவில்லை.

### மின்சாரம் துண்டிப்பு

பல இடங்களில் நேற்று மூன்தினம் இரவு முதல் மின்சாரம் தடைப்பட்டதுடன் தொலை பேசியும் சீர்கேடடைந்துள்ளது, யாழ் நகரில் பெரும்பாலான வாகனங்கள் நீரில் மூழ்கியிருந்தன. சில இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்துள்ளது. கச்சேரியடியில் இரண்டு பெரிய மரங்கள் ஒன்று கண்டிவீதிக்குக் குறுக்கே விழுநததால் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது.

மழையின்மையால் இரண்டாந்தரம் விதைக்கப்பட்ட வயல்கள் யாவும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. குளங்கள் கிணறுகள் யாவும் நிரம்பியுள்ளன.

### புயல் வெள்ள அறிகுறி?

மழை தொடர்ந்து பெய்யும் பட்சத்தில் யாழ்ப்பாணத்தில பெருவெள்ளம் ஏற்படலாம் என்று அஞ்சப்படுகிறது. இம் மாதம் 17-ந திகதிக்கு முன்னர் புயல் வீசும் அறிகுறிகள் காணப்படுவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

யாழ். நகரின் அநேக முக்கிய வீதிகள் வெள்ளத்தில் மூழ்கிக்கிடக்கின்றன. ஸ்ரான்லிவீதி, விக்டோறியாவீதி, மகாத்மா காந்திவீதி, ஆஸ்பத்திரிவீதி, முனீஸ்வரன் வீதி ஆகியன வெள்ளத்தில் மூழ்கியுளளன.

### சிங்கள மகாவித்தியாலயம் வெள்ளத்தில்

யாழ். சிங்கள மகாவித்தியாலயமும் வெளளத்தில் மூழ்கியது. நேற்றுப்பாடசாலைநடைபெறவில்லை.

### மக்கள் தஞ்சம்

யாழ். அடைக்கலமாதா பாடசாலையிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தஞ்சமடைந்துளனர்.

### ஆரியகுளம்

யாழ் ஆரியகுளம் நிரம்பி வழிகிறது. சுற்றாடலிலுளள பெருந்தொகையான வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்தது. அநேகர் வீடிழந்துள்ளனர்.

### நல்லூர் பகுதியில்

நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலைச் சூழ்ந்துள்ள பகுதிகளில் வீடுகளுக்குள வெளளம் புகுந்ததினால் பலர் வீடிழந்துளளனர்.

பெரிய வீடுகளுக்குள எல்லாம் வெளளம் புகுந்துளளது. பருத்தித்துறைவீதிக்கும் பலாலிவீதிக்குமிடையே வீதியில் இடுப்பளவுவெளளம் ஓடிக்கொண்டிருந்தது

### மூதாட்டி ஆஸ்பத்திரியில்

கொட்டடியிலுளள வீடு ஒன்றின் குசினி சுவர் இடிந்து விழுந்ததனால் காயமடைந்த அழகம்மா என்ற 60 வயது மூதாட்டி யாழ் ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டுளளார்.

யாழ். ஆஸ்பத்திரி

## பிரசவ வார்டுக்குள் வெள்ளம்!

[யாழ்ப்பாணம்]

யாழ். ஆஸ்பத்திரி பிரசவ வார்ட்டுக்குள்ளும் வெள்ளம் புகுந்ததால் கர்ப்பிணிகளும், சிசுக்களைப் பிரசவித்த தாய்மாரும் பெரும் சிரமத்துக்குள்ளாகினர்.

பிரசவவார்ட் (2ம் வார்ட்)க்குள் சுமார் 2 அடி வெள்ளம் நிற்பதால் தாய்மார்கள் தமது சிசுக்களுடன் கட்டில்களிலேயே அமர்ந்திருந்தனர்.

சிலர் மாடியிலுள்ள 1-ம் வார்ட்டுக்கு மாற்றப்பட்டனர். [இ]

## பரீட்சை ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்ட பாடசாலைகளில் 6ம் வகுப்புக்கு மாணவர்களை சேர்ப்பதற்காக இன்று நடைபெறவிருந்த பரீட்சை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணத்தில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வவரை ரத்துச்செய்யப்பட்டுள்ளது,

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு கோட்டைவரை வழமைபோல் ரயில் சேவைகள் நடைபெற்று வருகின்றன,

கொக்குவிலுக்கும் கோண்டாவிலுக்குமிடையில் ரயில் பாதையைமூடி 2 அடி வெள்ளம் பாய்வதாலேயே காங்கேசன் துறை வரையிலான சேவைகள் ரத்துச் செய்யப்பட்டன என்று ரயில்வேப் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்,

நேற்றுக்காலை 7-25-க்கு யாழ்ப்பாணம் வந்த மெயில் ரயில் கொழும்புக்கு மாலை 7-05-க்கு புறப்பட்டது, பகல் 2-45-க்கு கொழும்பிலிருந்து வந்த யாழ் தேவி கடுகதிரயில் மாலை 4-30-க்கு கொழும்புக்குச் சென்றது

கொழும்பிலிருந்து நேற்று வந்த எண்ணை சரக்கு ரயில்கள் யாழ்ப்பாணத்துடன் நிறுத்தப்பட்டன.

பனைவரையிலான வேகம் குறைந்த ரயில்சேவைகளும் நேற்று சேவையில் ஈடுபடவில்லை.

### இன்றைய சேவை

இன்று கோண்டாவிலில் வெள்ள நிலைமை திருந்தும் பட்சத்தில் காங்கேசன் துறையிலிருந்த வழமையான ரயில் சேவைகள் நடைபெறும் என்றும் நிலைமையை ரயில்வேப் பகுதி அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர் என்றும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ]இமை நிரு-இ]

## ஜனாதிபதி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

குழு முன் ஆஜராகவேண்டும் என்றும்-

திரு காமினி விக்கிரமநாயக்காவை டிசம்பர் மாதம் 4-ம் திகதி ஆணைக்குழுவிடம் வாக்கு மூலம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் ஜனவரி மாதம் 15-ம் திகதி ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராக வேண்டும் என்றும் உத்தர விடப்பட்டுள்ளது, (இ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978ம் ஆண்டு நவம்பர் மாதம் 4ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone: 389 - Registered as Newspaper in Sri Lanka.